உ


ஓம் சக்தி

✆ : 04253 -282337, 281337

தமிழ் நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்

ஆனைமலை – 642 104 ✦ பொள்ளாச்சி வட்டம் ✦ கோவை மாவட்டம்



அனுப்புநர்

பெ. இராமநாதபிள்ளை, பி.ஏ.,பி.எட்.,
செயல் அலுவலர்(கூ. பொ).

பெறுநர்

ஆணையர் அவர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை – 34.

(வழி) இணை ஆணையர் அவர்கள்,
இந்து சமய அறநிலையத்துறை,
கோவை – 18.

நாள் 10 .09.2009.

அய்யா,

பொருள் : அனுமதி – புதிய மோட்டார் வாகனம் வாங்குவதற்கு - டொயோட்டா இன்னோவா கார் -- அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் - ஆனைமலை – பொள்ளாச்சி வட்டம் - கோவை மாவட்டம் - அனுமதி வேண்டுதல் - சம்பந்தமாக.

பார்வை : 1. அறங்காவலர் குழு சுற்றுத் தீர்மான எண். நாள். 09.2009.
2. ஆனைமலை ஏஜென்சீஸ் நிறுவனத்தாரன் விலைப்புள்ளி நாள். 09.09.2009.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(111)ன்படி பட்டியலில் சேர்ந்ததும், பசலி 1417க்கு ரூ.2,80,58,341/- வருமானத்தின் பேரில் உதவித்தொகை நிர்ணயம் செய்யப்பட்ட முதுநிலைத் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் முதல்நிலை செயல் அலுவலர் மற்றும் அறங்காவலர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலானது கோவை மாநகரிலிருந்து தென் திசையில் 55 கிலோ மீட்டர் தொலைவிலும், பொள்ளாச்சி நகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தென் திசையிலும் உப்பாறு ஆற்றங்கரையின் அருகாமையில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கென கோவை, ஈரோடு மாவட்டங்களிலுள்ள சேவார்த்திகள் மட்டுமல்லாது அண்டைய மாவட்டங்களான மதுரை, ராமநாதபுரம் முதலானவைகளிலிருந்தும் மற்றும் அண்டைய கேரளா, ஆந்திரா, கர்னாடகா மாநிலங்களின் பல பாகங்களிலிருந்தும் திரளான சேவார்த்திகள் வந்து வழிபாடு செய்கின்றனர். இத்திருக்கோயிலானது முக்கிய பிரார்த்தனை ஸ்தலமாகும். இத்திருக்கோயிலில் தினசரி நான்கு காலபூஜைகள் நடைபெற்று வருவதுடன் காலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை தொடர்ந்து கோயிலின் நடை பக்தர்களின் வசதிக்காக திறக்கப்பட்டு இருந்து வருகிறது. இத்திருக்கோயிலுக்கு உண்டியல் வருமானம், கட்டணச் சீட்டு விற்பனை வருமானம், உபய பரிவட்டங்கள் விற்பனை, முதலீடு வட்டி வருமானம், தற்காலிக கடைகள் மற்றும் பலவகை உரிமங்கள் மூலமாக பிரதான வருமானம் பெறப்படுகிறது. இத்திருக்கோயிலுக்கு தற்சமயம் ரூ.12,77,00,946/- மதிப்பிலான தொகை பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

..2

இத்திருக்கோயிலில் கடந்த 9.11.2000 அன்று மிகச் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்றதன்பின்னிட்டு மிக அதிக அளவில் சேவார்த்திகள் வருகை தருகின்றனர். இத்திருக்கோயிலின் வருமானமும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலில் அருள்மிகு மாசாணியம்மன் மயான தேவதையாக சயனித்த கோலத்தில் 17 அடி நீளத்தில் பலவண்ண சுதையால் அமைந்துள்ளது. அருள்மிகு மாசாணியம்மன் பெண்களுக்குரிய சிறப்பு தேவதையாகும். அதனால் அம்மனுக்குரிய நாட்களான செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும், அமாவாசை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மிக அதிகமான அளவில் சேவார்த்திகள் வருகை தருகின்றனர். வருடாந்திர உற்சவமான குண்டம் திருவிழா மாசி மாதத்தில் (பிப்ரவரி) மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் சுமார் 3 இலட்சம் பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இத்திருக்கோயிலில் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டும் திருப்பணி வேலைகளுக்கு ஆணையர் செ.மு. ந. க. எண். 54394/ 2003 /ஒய் 3 நாள்.20.11.2003 உத்தரவின்படி ரூ. 50.00 இலட்சம் செலவிலான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு இதில் ரூ. 35,00,000/- திருப்பணி நிதி மூலமாகவும், ரூ.15,00,000/- உபயம் மற்றும் நன்கொடை மூலமாகவும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆணையரின் உத்தரவின்படி இந்தப் பணிக்கான ரூ.15.00 இலட்சம் தொகை திரட்டுவதற்கு உபயதாரர் மற்றும் நன்கொடைதாரர்களை அணுகவேண்டியுள்ளதென்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இது தவிர, இத்திருக்கோயிலில் புதிதாக தங்கரதம் செய்வதற்கு ஆணையர் ந.க.எண். 76889/2004/ஐ.2 நாள். 26.12. 2004 உத்தரவின்படி ரூ. 70, 05,600 மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ.15.00 இலட்சம் நிதி திரட்டவும், தங்கரத திருப்பணி வேலைகளுக்கு தேவையான நிதியாதரங்களை திரட்டவும் உபயதாரர் மற்றும் நன்கொடைதாரர்களை அணுகவேண்டியுள்ளதாலும், வளர்ந்து வரும் இத்திருக்கோயிலின் நிர்வாகப் பணிகளை முன்னிட்டும் ஒரு புதிய நான்கு சக்கர மோட்டார் வாகனம் தேவை என்பதால், திருக்கோயிலின் அறங்காவலர் குழுவினர் கலந்து ஆலோசனை செய்து திருக்கோயிலுக்கு அதிநவீன வசதிகளைக் கொண்ட டொயோட்டா இன்னோவா கார் (MODEL VX - 7 WITH 102 BHp (2494 CC) 7 SEAT DIESEL) ஒன்றினை வாங்க விலைப்புள்ளிகள் பெறலாம் முடிவு செய்து பார்வைக்குறிப்பின் படி தீர்மானம் இயற்றி உள்ளனர் என்ற விவரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்படி வாகனத்தினை பெறுவதற்கு அங்கீகாரம் பெற்ற கோயமுத்தூர் ஆனைமலை ஏஜென்சீஸ் நிறுவனத்தை அணுகியதில் மேற்படி வாகனத்திற்கு ரூ.12,48,726/- தொகைக்கு விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, வளர்ந்து வரும் இத்திருக்கோயிலின் நிர்வாக நலன் கருதியும், இராஜகோபுரத்திருப்பணி மற்றும் தங்கரத திருப்பணி வேலைகளுக்கான நிதியாதாரத்தைப் பெருக்க உபயதாரர்கள் மற்றும் நன்கொடைதாரர்களை அணுகி நிதி திரட்ட வேண்டியதன் அவசியத்தைக் கருதியும், அறங்காவலர் குழு தீர்மானத்தின்படியும், மேற்படி வாகனத்தை வாங்குவதற்கு இத்திருக்கோயிலின் நிதியாதாரம் போதுமானதாக உள்ளதென்பதாலும், இத்திருக்கோயிலுக்கு ஒரு புதிய நான்கு சக்கர மோட்டார் வாகனமான டொயோட்டா இன்னோவா கார் (MODEL VX -7 WITH 102 BHp (2494 CC) 7 SEAT DIESEL) ஒன்றினை ரூ.12,48,726/-க்கு திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி நிறுனத்தின் மூலமாக வாங்குவதற்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருக்கோயிலின் நிதியாதாரம்

1. முதலீடுகள் --ரூ.12,77,00,946/-
2. சேமிப்பு கணக்கு ரூ.28,60,661/-

மேலும், கட்டணச்சீட்டுகள் விற்பனை, உண்டியல் வருவாய், மற்றும் உபய வரவுகள் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.25,00,000/- க்கு மேல் திருக்கோயிலுக்கு வருவாய் வரப்பெறுகிறது.

இத்துடன் பெறப்பட்ட விலைப்புள்ளி மற்றும் இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட அறங்காவலர் குழு தீர்மான நகல் ஆகியன இணைத்து பணிந்தனுப்பப்படுகிறது.

இணைப்பு : தாள்கள்.

செயல் அலுவலர்
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்
ஆனைமலை
பொள்ளாச்சி வட்டம்